செ.வெ. எண்: 518 நாள்: 04.09.2012

<u>பத்திரிக்கைச் செய்தி:</u>

<u>இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை – 106.</u>

2012 – 2013 ஆம் கல்வியாண்டிற்குரிய பி.எஸ்.எம்.எஸ் / பி.ஏ.எம்.எஸ் / பி.யு.எம்.எஸ் / பி.என்.ஒய்.எஸ் / பி.எச்.எம்.எஸ் மருத்துவ பட்டபடிப்பிற்களுக்கான சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர முறை கலந்தாய்வு சென்னை, அரும்பாக்கத்திலுள்ள அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனை வளாகத்திலுள்ள தேர்வுக்குழு அலுவலகத்தில் கீழ்க்கண்ட கலந்தாய்வு அட்டவணைப்படி நடைபெறும். தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே கலந்தாய்வு தகவல் / அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி தகவல் / அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெறாதோர், வலைதளம் "www.tnhealth.org" –ல் தங்களது விண்ணப்ப பதிவு எண் (A.R.No.) மற்றும் பிறந்த தேதியினைக் குறிப்பிட்டு தங்களுக்குரிய தகவல் / அழைப்புக்கடிதத்தை பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். மேலும், விண்ணப்பதாரர்கள் அவரவர்க்குரிய கட் ஆப் மதிப்பெண்ணுக்கு ஏற்றவாறு உரிய கலந்தாய்வு நாளில் தங்களது அனைத்து அசல் சான்றிதழ்களுடனும் அல்லது தற்சமயம் படித்து வரும் கல்லூரியிலிருந்து பெற்ற ஆளறிச்சான்றிதழுடனும் (Bonafide certificate), தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து, 04.09.2012 – அன்றோ அல்லது அதற்குப்பின்னரோ , சென்னையில் மாற்றத்தக்க, " Director of Indian Medicine and Homoeopathy, Chennai–106 " என்ற பெயரில் , ரூ.5,500/– (ரூபாய் ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்) –க்கான கேட்பு வரைவோலையுடனும் கலந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தயவு செய்து "www.tnhealth.org " என்ற வலைதளத்தை தொடர்பு கொள்ளலாம்.

கலந்தாய்வு அட்டவணை.

2012 – 2013 கல்வியாண்டு

| கிழமை / தேதி | நேரம் | கட் ஆப் மதிப்பெண் / தரவரிசை |
|---|---|---|
| வெள்ளிக்கிழமை 14.09.2012 | 9.00 மு.ப. | சிறப்பு பிரிவுகள் |
| | 10.15 மு.ப. | 195.75 – 187.50 தரவரிசை: 1– 100 |
| | 2.30 பி.ப. | 187.25 – 178.00 தரவரிசை: 101– 300 |
| சனிக்கிழமை 15.09.2012 | 9.00 மு.ப. | 177.75 – 167.25 தரவரிசை: 301 – 550 |
| | 2.00 பி.ப. | 167.00 – 157.00 தரவரிசை: 551 – 802 |
| ஞாயிற்றுக்கிழமை 16.09.2012 | விடுமுறை | |
| திங்கட்கிழமை 17.09.2012 | 9.00 மு.ப. | 156.75 – 146.25 தரவரிசை: 803 – 1050 |
| | 2.00 பி.ப. | 146.00 – 132.00 தரவரிசை: 1051 – 1294 |
| செவ்வாய்க்கிழமை 18.09.2012 | 9.00 மு.ப. | 131.75 – 110.00 தரவரிசை: 1295 – 1551 |
| | 2.00 பி.ப. | 109.75 – 82.00 தரவரிசை: 1552 – 1700 |

************

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**